# 21 வயதிற்குக் குறைந்த இளைஞர்களுக்கான விரைவார்ந்த ஈடுபாடு திட்டம் EE21

## நிபுணத்துவ சேவைகளுக்கான மையத்தின் ஒரு திட்டம்

சட்டத்துடன் பிரச்சினையா? நீதிமன்றத்தில் உங்கள் முதல் நாளிலிருந்து வழக்கு முடியும் வரை உங்களுக்கு ஆதரவளிக்க நாங்கள் இருக்கிறோம்.

உங்கள் நேரத்தை உங்களுக்குப் பயனுள்ளதாக்குவோம்.

## தொடங்குவோம்!



### தனிப்பட்ட வளர்ச்சி

சம இடைவெளிகளில் உங்கள் வளர்ச்சி பயணத்தைப் பற்றிய உரையாடல்கள்



### பண விவகாரங்கள்

நிதி தொடர்பான உதவி




### படிப்பு மற்றும் வேலை

உங்கள் எதிர்காலத்திற்கான திறன் பயிற்சி



### ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சி

விளையாட்டு மற்றும் துடிப்பான வாழ்க்கை முறை



### மேலும் உதவி பெறுதல்

உங்களை மற்ற சமுதாய மற்றும் ஆதரவு சேவைகளுடன் இணைத்தல்

# தொடங்கத் தயாரா?

- 21 வயதிற்குக் கீழ்
- இந்தத் திட்டத்தில் சேர்ந்து உங்கள் தனிப்பட்ட குறிக்கோள்களில் எங்களுடன் பணியாற்ற விரும்புகிறீர்களா - இது உங்கள் விருப்பம்!
- ஒவ்வொரு நீதிமன்ற தேதிக்குப் பிறகும் தொலைபேசி மூலமாகவோ அல்லது எங்கள் தளம் 18-ல் உள்ள அலுவலகத்திற்கு வருகை புரிந்தோ குறுகிய உரையாடலுக்குத் தயாராக இருப்பது
- உங்களுக்கு உதவக்கூடிய அமைப்புகளுடன் ஒத்துழைக்க ஒப்புக்கொண்டு அவர்களின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது

# நிபுணத்துவ சேவைகளுக்கான மையம்

நிபுணத்துவ சேவைகளுக்கான மையம் (**CSS**), மனோதத்துவ நிபுணர்கள், ஆலோசகர்கள், மற்றும் சமூக சேவையாளர்களைக் கொண்ட ஒரு குழுவை உள்ளடக்கும். நீதிமன்ற பயனர்களுக்கு மதிப்பீடும் பரிந்துரைகளும் வழங்குவதற்கு **CSS**, அரசு நீதிமன்றங்களுக்கு ஆதரவளித்து, நீதிமன்ற திட்டங்களை நிர்வகிப்பதையும் மேற்கொள்கிறது. நீதிமன்ற பயனர்களுக்கும் அவர்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கும் ஆதரவு அளித்து உதவ, சிங்கப்பூரில் உள்ள சமூக அமைப்புகளுடனும் **CSS** நெருக்கமாக பணியாற்றுகிறது.

# எங்களுடன் பேசுங்கள்


அரசு நீதிமன்றங்கள் **1** ஹெவ்லாக் சதுக்கம், தளம் **18, CSS** அலுவலகம், சிங்கப்பூர் **059724**

**www.judiciary.gov.sg**

**SC_CENTRE_FOR_SPECIALIST_SVCS@JUDICIARY.GOV.SG**



பொறுப்புத் துறப்பு: இந்த வெளியீடு பொதுவான தகவல் வழங்கும் நோக்கத்துடன் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளதேயன்றி, சட்ட ஆலோசனைக்கு மாற்றாக அல்ல. உங்கள் வழக்கு குறித்து சட்ட ஆலோசனை தேவைப்பட்டால் ஒரு வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க வேண்டும். இந்த வெளியீட்டின் பொருளடக்கத்திலிருந்து மற்றும் அதன் தொடர்பாக எழும் ஏதேனும் மற்றும் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் அரசு நீதிமன்றங்கள் மறுப்புரிமை பெற்றுள்ளன.


எல்லாத் தகவல்களும் **30** ஜனவரி **2026** தேதிப்படி சரியானவை.